திரு. கே. விநாயகம் : பழைய மாம்பலத்திலிருந்து ஜார்ஜ் டவுனுக்கு அல்லது மற்ற பகுதிகளுக்கு நேரடியாக போக பஸ் வசதி இல்லை. அதற்குக் காரணம் அங்கு லெவல் கிராஸிங் கேட் இருப்பதனால் தான் என்று கருதுகிறேன். இப்பொழுது கோடம்பாக்கத்தில் ஓவர் பிரிட்ஜ் கட்டப் பட்டிருக்கிறதே ? ஆகவே, பஸ்களை பழைய மாம்பலத்திலிருந்து ஆரம் பித்து, வட பழனி வந்து, அங்கிருந்து மற்ற பகுதிகளுக்கு ஓவர் பிரிட்ஜ் மூலம் போவதற்கு வசதி இருக்கிறதே ? இதைப் பற்றி அரசு யோசிக்குமா? அப்படி அது நியாயமான கோரிக்கை என்றால், அதை செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தற்பொழுது பழைய மாம்பலத் திலிருந்து தியாகராய நகருக்கு 49 என்ற எண்ணுள்ள வண்டி போய்க் கொண்டிருப்பதால், தியாகராயநகர் வந்து, பிறகு அங்கிருந்து ஜார்ஜ் டவுன் போன்ற, செல்ல வேண்டிய இடங்களுக்கு, செல்வதற்கு வசதி இருக் கிறது. உறுப்பினர் அவர்கள் கூறுகின்றது போல பஸ்கள் விடுவதற்கு, பழைய மாம்பலத்தில் துரைசாமி சாலையில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்ட பிறகு, அது ஏதுவாக இருக்க முடியும்.

விரைவுப் பேருந்து

* 114 வினா.—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும், தேவகோட்டைக்குமிடையே பழனி, திண்டுக்கல் வழியாக தமிழக அரசு விரைவு வண்டி விடும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

பிறபகல் 9-30. **திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இனிமேலாவது பேருந்து விட அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கோவைக்கும், தேவகோட்டைக் கும் இடையே பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு இல்லை என்று மூலக் கேள்விக்கு பதில் சொன்னேன். கோவையிலிருந்து, இராமநாதபுரம் வரைக்கும் பேருந்து விட செயற்குறிப்பு இப்பொழுது அரசாங்கத்தினுடைய ஆலோசனையில் இருக்கிறது. பரிசீலனை முடிவுற்ற பிறகு, அதைப்பற்றி யோசிக்கப்படும்.

Bulls for Cattle Farms

*115 *Q.*—**Thiru A. M. RAJA :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government entered into an agreement with Palayacottah Cattle Farm and Kangeyam Cattle Farm in Coimbatore district during the year 1966–67 for the purchase of bulls :

(*b*) if so, the cost of each bull ;

(*c*) when the bulls were taken delivery of ;

(*d*) the total cost paid ; and

(*e*) when payment was made.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : (அ) அரசாங்கம் ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளவில்லை.

(இ) முதல் (ஐ) வரை இவ்வினாக்கள் எழவில்லை.

திரு ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, இதற்கு முந்திய ஆண்டுகளில், அதாவது 1962–66-ல் பழைய கோட்டை, காங்கயம் காளைகளை வாங்குவதாக ஏதாவது ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததா ? ஆம் எனில், அதற்காக ஒப்பந்தம் செய்துகொண்ட தொகை எவ்வளவு ? ஒவ்வொரு காளைக்கும் என்ன விலை கொடுக்கப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, 1962–63-ம் ஆண்டுகளில், காங்கயம் காளைகளை பழைய கோட்டைப் பண்ணையிலிருந்து வாங்கியிருக்கிறது. 13 காளைகளை ரூ. 14,050-க்கு வாங்கப்பட்டிருந்தது. அதில், சில காளைகள் ரூ. 1,000-மும், சில ரூ. 1,200, ரூ. 1,300 என்றும் இருக்கிறது. மொத்தமாகக் கொடுக்கப்பட்டது ரூ. 14,050. அதன் விவரம்—

1963–64-ல், 6 காளைகள் ரூ. 7,500-க்கும்,

1964–65-ல், 3 காளைகள் ரூ. 3,000-க்கும்,

1965–66-ல், 7 காளைகள் ரூ. 7,500-க்கும் வாங்கப்பட்டிருக்கின்றன.

காங்கயம் பண்ணையிலிருந்து—

1962–63-ல், 14 காளைகள் ரூ. 14,000-க்கும்,

1963–64-ல், 7 காளைகள் ரூ. 7,000-க்கும்,

1964–65-ல், 7 காளைகள் ரூ. 7,000-க்கும்

1965–66-ல், 7 காளைகள் ரூ. 7,000-க்கும் ஆக மொத்தம் ரூ. 60,000 -க்கு காளைகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

திரு சு. துரைசாமி : சார், காங்கயம் பக்கத்தில் தரமுள்ள காளைகள் குறைந்த விலையில் கிடைக்கும்போது, பழைய கோட்டைப் பண்ணையிலிருந்து அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : நாம் பொறுப்பேற்ற பிறகு வாங்கியது இல்லை இவை. ஏற்கெனவே, 1962–ல் இருந்து 1966 வரை வாங்கியிருக்கிறார்கள் ; அப்பொழுது வாங்கியவர்களைத்தான் கேட்கவேண்டும்.

திரு செ. பாலசுப்பிரமணியன் : பழைய கோட்டைப் பண்ணை, யாருக்குச் சொந்தம் என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினருக்கே நன்றாகத் தெரியும்; அது அவர்களை எதிர்த்துப் போட்டியிட்டுத் தோற்றுப் போன பழைய கோட்டை நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியாருடையது என்று. (சிரிப்பு)

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, காங்கயம் பழைய கோட்டைப் பண்ணைக்கு மாட்டுத் தீவனத்திற்காக, பழைய அரசாங்கம் ஏதாவது மானியமாகக் கொடுத்துள்ளதா ? அப்படிக் கொடுத்திருந்தால், அந்தத் தொகையின் மதிப்பு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : 1942-லிருந்து 1959 வரையில் பழைய கோட்டைப் பண்ணைக்கு, மாட்டு வளர்ப்புத் திட்டம் என்ற அடிப்படையில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், சென்னை அரசாங்கமும் பகிர்ந்து கொடுத்திருக்கிறது. மொத்த மதிப்பை 17 பாகங்களாகப் போட்டு, 9 பாகத்தை பட்டகாரும், 4 பாகத்தை இந்திய

வேளாண்மை ஆராய்ச்சிக் கழகமும், 4 பாகத்தை ராச்சிய சர்க்காரும் கொடுத்திருக்கிறது. அந்த வகையில் ரூ. 1,99,411 தீவனத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே தனக்கும் பாகம் உண்டு என்று திரு மதி பார்வதி அர்ஜுனன் கேட்டார்கள். அதைப் பாதி பகிர்ந்து அவர் களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவர் அவர்களே, இனிமேலாவது பழைய கோட்டைக் காளைகளை வாங்காமல், பொதுமக்களிடமிருந்து வாங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படி "பழைய கோட்டை பட்டகார் பண்ணை" என்பதாலேயே வாங்கக் கூடாது என்பதில்லை. தரமுள்ளதாகக் கிடைத்தால், அது எந்தப் பண்ணையானாலும், தனியார் துறையானாலும் வாங்கலாம். அவர்களுடைய பெரிய பண்ணை என்பதா லேயே வாங்கக்கூடாது என்று விதியொன்றும் கிடையாது.

திரு. பி. வேலுசாமி : ஐயா, பழைய கோட்டை பண்ணைக்காக மேய்ச்சல் காடாக ஏதாவது நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? ஆம் என்றால், எவ்வளவு ஏக்கர்கள் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்லலாம். அவருடைய உறவினர் ஒருவருக்கு ஏதோ நிலம் ஒதுக்கப்பட்டதாகக் கேள்வி.

திரு. கே. விநயகம் : சார், பழைய கோட்டை கால்நடைப் பண்ணையாக இருந்தாலும் சரி, காங்கயம் பண்ணையாக இருந்தாலும் சரி, எந்தப் பண்ணையிலிருந்து மாடு வாங்கினாலும், நேரிடையாக அமைச்சரே போவது கிடையாது, அது வழக்கமில்லை; அதையெல்லாம் அதிகாரிகள் பார்த்து செய் கிறார்கள். அந்த டைரக்டர் ஆப் வெடரினரி சர்வீஸ், இன்னும் மற்றுமுள்ள அதிகாரிகள் இன்றும் இருக்கிறார்கள், அவர்கள் பார்த்துத்தானே மதிப்பு போட்டு, அந்த மதிப்புச் சரி என்று நியமனம் செய்து, அரசாங்கம் பணம் கொடுத்திருக்கும். அதற்கு மந்திரி பொறுப்பில்லை என்பதும் அரசாங்கத் திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விநயகம் பழைய கோட்டை பட்டகாரைக் காப்பாற்றுவதாக நினைக்கிறார்கள் போலும். நான் ஏதோ சர்க்கரை மன்றாடியாரைத் தாக்கிப் பேசினதாக விநயகம் தான் கேட்கி றார்கள். அப்படி யார் யார் வாங்கியவர்கள் என்கின்ற தகவல்கள் பற்றி விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. நான் ஏதோ குறைவாகச் சொன்னதாக ஜனங்களுக்கு விநயகம் கேட்ட பிறகுதான் தோன்றுமே தவிர, என்னுடைய பதில்களிலிருந்து அப்படிப்பட்ட எண்ணம் வராது.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், இந்த கால்நடைகள்பற்றி, ஸ்டாக் புத் தகங்களில், 1,000 ரூபாய் பொருமானம் உள்ளவற்றை 100, 150 என்று புக் வால்யூவைக் குறைத்துக் காட்டி மோசடி செய்வதற்கு ஏதுவாக இருப்பதாக பிரஸ்தாபம் இருக்கிறதே, அதைப் பரிசீலனை செய்து அந்த கால்நடைகளுக்கு நியாயமான விலை, மார்க்கெட் விலை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதைப்பற்றியெல்லாம் பரிசீ லனை செய்து, தகுந்த திட்டங்கள் வகுக்க வேண்டும் என்றுதான், இதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பழைய கோட்டை காங்கயம் கால்நடைப் பண்ணைகளில் காளைகளை வாங்குவதாகத் தீர்மா னித்து, பணத்தையும் தந்து, காளைகளை உடனடியாக நம்முடைய பண்ணை களுக்கு கொண்டுவராமல் இருந்து விட்டு, காலம் கழித்த பிற்பாடு, காளைகளை வேண்டாம் என்று சொல்லி, பணத்தைத் திருப்பித் தாருங்கள்

என்று கேட்டதற்கு, அவர்கள், இவ்வளவு நாட்கள் காளைகளுக்கு வைக்கோல், தீனிகள் போட்டவகைக்குச் சரியாகப் போய்விட்டது என்று கூறிவிட்டார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் சொல்லுகின்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், எந்த ஆண்டில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டன என்கிற விவரம் கண்டு, அது பற்றி கருத்து அளிக்கப்படலாம்.

திரு. டி. மார்டின் : அவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு பொறுப்பேற்ற பிறகு வாங்கிய காளைகள் எவ்வளவு, எந்த எந்த கால்நடை பண்ணைகளில் வாங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. தோ. மு. நல்லசாமி : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் சொன்ன விடையிலிருந்து, ஏற்கெனவே அவர்கள் குறிப்பிட்ட விலைகள் அப்பொழுது இருந்த நிலவரத்திலும் அதிகப்படியான விலையாகத் தோன்றவில்லை. இன்றைக்கும், பெரிய பண்ணை வைத்து நல்ல முறையில் வளர்க்கிறவர்களுக்கு அப்படிப் பட்ட விலை கொடுப்பதில் என்ன தவறு என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பழையகோட்டைப் பண்ணையிலிருந்து வாங்கியது அதிக விலையா, குறைந்த விலையா என்பதைப்பற்றி நான் எடுத்துச் சொல்லவில்லை ; அது என்னுடைய பதிலிலிருந்து அறிந்துக்கொள்ள முடியாது. இரண்டாவதாக, முன்பே ஒரு கேள்விக்குப் பதில் சொன்னது போல, எந்தப் பண்ணையாக இருந்தாலும், பழைய கோட்டை பண்ணையானலும், தனியார் பண்ணையானலும், தரமான காளைகளாக இருந்தால் அவற்றின் விலையை நிர்ணயம் செய்து, வாங்கப்படும். குறிப்பிட்ட பண்ணையிலிருந்து வாங்கக் கூடாது என்றே, அல்லது வாங்க வேண்டும் என்றே விதி எதுவும் கிடையாது.

சாக்கடை அமைப்புத் திட்டங்கள்

***116 வினு.—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர மன்றம் பாதாள சாக்கடை திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் கடனே, மானியமோ கோரியுள்ளதா ?

(இ) இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் நகரம் ஏறத்தாழ 125,000 மக்கட் தொகை கொண்ட பெரிய நகரமாக இருப்பதாலும், நாளொன்றுக்கு இருபதாயிரத்துக்கும் அதிகமாக மக்கள் அங்கு வந்து போவதாலும், அந்நகரத்தின் சுகாதார வசதி கெடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, விரைவில் அந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அத்தகைய திட்டத்திற்கு நகர மன்றத்திலிருந்து யாதொரு கோரிக்கையும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படிக் கோரிக்கை வரும் நேரத்தில் கவனிக்கப்படும்.